திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, மெரினா பீச் ரோடு அரசாங்கப் பராமரிப்பில் உள்ளதா அல்லது கார்ப்பரேஷன் பராமரிப்பில் இருக்கிறதா ? குறிப்பாக பப்ளிக் ஒர்க்ஸ் ஆபீஸ்கள் இருக்கும் இடத்திற்கு எதிரில் மெரினா சாலை மிக மோசமாக இருக்கிறது. அதைச் சரி செய்ய அரசாங்கம் உத்தரவு போடுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதே, வடக்கே கஸ்டம்ஸ் ஹவுசிலிருந்து பீச்சு சாலைகளெல்லாம் அரசாங்கப் பராமரிப்பில் தான் இருக்கின்றன. உறுப்பினர் சொன்ன குறைபாடுகளும் கவனிக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சென்னை நகரம் நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகிறது. ஆகவே, நெடுஞ்சாலை பராமரிப்புக்கு அதிகமான தொகைகள் ஒதுக்கப்பட வேண்டும். ஆனால் இங்கே பார்க்கும்போது, 1964-65-ல் ரூ. 4,08,847 என்று இருந்தது, 1966-67-ல் ரூ. 3,61,479 என்று குறைந்துவிட்டிருக்கிறது. அப்படிக் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பழுது குறைவாக இருந்திருக்கும். ஆகவே, செலவும் குறைவாக இருக்கும்.

உடன்குடி பகுதியில் தானிய விநியோகம்

*215 வினா—**திரு. டி. மார்ட்டின் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் உடன்குடி பகுதிகளிலுள்ள (minor) பஞ்சாயத்துக் கிராமங்களில் ரேஷன் கொடுக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) தூத்துக்குடி சப் தாலூக்காக்களில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ரேஷன் வழங்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அண்டு (இ) சாத்தான்குளம் பகுதியில் அரிசி தேவைப்படுகிற 18 கிராமங்களில் நியாயவிலை கடைகள் மூலமாக அரிசி வழங்கப்படுகிறது. தூத்துக்குடி துணைவட்டத்தில் 20 கிராமங்களுக்கு அரிசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. டி. மார்ட்டின் : ஸ்பீக்கர் ஸார், சாத்தான்குளம் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், அறுவடை காலம் என்று பல கிராமங்களில் ரேஷன் நிறுத்தப்பட்டு இருப்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அந்த கிராமங்களில் திரும்பவும் அரிசிபோட சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அறுவடைக் காலத்தை முன்னிட்டு, சாத்தான்குளம், உடன்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில், சில பஞ்சாயத்துக்களில் உணவுப் பங்கீடு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அங்கேயெல்லாம் இப்பொழுது திரும்பவும் குடும்பக் கார்டு முறையில் பங்கீடு செய்யப்படுகிறது. சாத்தான்குளத்தில், பெரியதலை, புடுக்கப்பட்டு, அரசூர், எழுவரைமுக்கி, அலகப்பாபுறம் போன்ற 18 பஞ்சாயத்துகளிலும், உடங்குடி பஞ்சாயத்து யூனியனில், அறியக்குறிச்சி, செட்டியப்பத்து, நங்கைமொழி, வெங்கடராமானுஜபுரம் போன்ற 12 பஞ்சாயத்துக்களும் ஆகும். அறுவடை காலம் என்பதற்காக முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தாலும், இப்பொழுது அது ரெஸ்டோர் செய்யப்பட்டுவிட்டது.

திரு மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, தூத்துக்குடி சப்தாலூகாவில் நஞ்சை நிலம் இருக்கும் கிராமங்களுக்கு அரிசி கொடுப்பதில்லை என்பது உண்மையா ?

1968 ஆகஸ்ட் 31]

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிராமங்களில் உணவுப் பங்கீடு கொடுப்பதில்லே என்று சொல்வது சரியானது அல்ல. எங்கு ரொம்ப நெருக்கடி இருக்கிறதோ, அங்கே பங்கீடு செய்யப் பட்டுக் கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் அறுவடை நடக்கிறது என்கிற காரணத்தால், தேவையில்லே என்று நிறுத்தியிருக்கலாம்.

ஹாஜி. ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலேவர் அவர்களே நகராட்சி மன்ற எல்லேயில், வீடு கிடைக்காத காரணத்தால், அருகாமையில் உள்ள கிராமத்தில் நகராட்சியில் வேலே செய்பவர்கள் இருக்கிருர்கள். ஆனுல், நகரத்தில் உணவுப் பங்கீடு இருந்தாலும், கிராமத்தில் பங்கீடு கிடையாது. ஆகவே, நகராட்சி எல்லேயில் இருக்கும் கிராமங்களில் இருப்ப வர்களுக்கும் ரேஷன் கிடைக்க உத்தரவு போடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தமாதிரி உத்தேசம் இல்லே. கொடுக்க வேண்டிய இடங்களில் இருக்கும் நிலேமைகளே அனு சரித்துத்தான் வினியோகிக்கப்படும்.

திரு பி. துரைராஜ் : சார், நஞ்சைப் பகுதிகளில் உணவுப் பங்கீடு அவ் வளவு அவசியம் இல்லே. வரட்சியான பிரதேசங்களுக்குத்தான் வேண்டும் என்று அமைச்சர் சொன்னுர்கள். நெல்லே மாவட்டத்தில் சங்கரன்கோவில் பகுதி மிகவும் வரண்ட பகுதி, நஞ்சை கிடையாது. அங்குள்ள எல்லா கிராமங்களுக்கும் உணவுப் பொருள் ரேஷன் போட நடவடிக்கை எடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நம்முடைய உணவு தானியங் கள் கையிருப்பைப் பொறுத்து அவசியமான இடங்களுக்குக் கொடுக்க பட்டு வருகிறது.

முன்னுள் படைவீரர்களுக்கு வீட்டுமனே

*216 வினு—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு உணவு வருவாய் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை முன்னுள் ராணுவத்தினர் சங்கத்திடம் இருந்து 1967-ம் வருடம் ஏப்ரல் மாதம் 15-ம் தேதி, 1967 ஜூலே மாதம் ஆகிய காலங் களில் வீடு கட்ட நிலம் கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் வந் துள்ளாதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த கோயம்புத்தூர் வட்டத்தில் உள்ள குறிச்சி கிராமத்தில் நில அளவை 603-1எ எண்ணில் முன்னுள் படை வீரர்களுக்கு வீடு கட்டுவதற்காகக் காலி மனே எதுவும் இல்லே என்று கோயம்புத்தூரில் உள்ள முன்னுள் படை வீரர் சங்கத் தலேவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

Training for fishermen.

*180 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is proposed to conduct State-wide training in the Departmental Inshore Fishing Stations and Training Centres under the auspices of Thiru Greeves Cotton & Co., and

(*b*) if so, the details thereof ?